### இந்தியா மற்றும் வெளிநாடுகளின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில்

# கல்வி பயிலச் செல்லும் 461 அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சான்றிதழ், மடிக்கணினி வழங்கி சிறப்புரை!

சென்னை, ஆக.4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (2.8.2024) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதன்மை உயர் கல்வி நிறுவனங்களுக்கு கல்வி பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், இந்தியாவில் உள்ள முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் 447 மாணவ, மாணவியர்களும், வெளிநாடுகளில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் 14 மாணவ, மாணவியர்களும், என மொத்தம் 461 மாணவ, மாணவியர்கள் கல்வி பயில செல்வதையொட்டி அவர்களைப் பாராட்டிச் சான்றிதழ் மற்றும் மடிக்கணிணிகளை வழங்கிடும் அடையாளமாக 23 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்தினார். மேலும், பள்ளிக் கல்வித் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 448 உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட இல்லம் தேடி கல்வி, நம் பள்ளி நம் பெருமை, எண்ணும் எழுத்தும், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங் களை செயல்படுத்துதல், பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள், மின்சாதன வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், திறன் வகுப்பறைகள் அமைத்தல், காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்வி பயில செல்வதை ஊக்கப்படுத்திட, 2022-23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்நிறுவனங்களில் இளநிலைப் பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச்செலவையும் மாநில அரசே ஏற்கும். 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளியில் பயின்றுள்ள மாணவர்கள் இந்த உதவியைப் பெறலாம்” என்று அறிவிக்கப்பட்டது.

மேற்காணும் திட்டத்தினை செயல்படுத்திடும் முன்னோட்டமாக, கடந்த 2021-22ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கல்வியில் பின் தங்கியுள்ள 10 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, அம் மாவட்டத்தின் அரசுப் பள்ளிகளில் பயிலும் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இந்த மாதிரிப் பள்ளிகளில் உண்டு உறைவிட வசதியுடன் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் விளைவாக முதலாம் ஆண்டிலேயே 75 மாணவர்கள் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குள் நுழைந்தனர்.

அதனைத் தொடர்ந்து 2022-23ஆம் ஆண்டு, மேலும் 15 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டதோடு, மற்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் IIT, NIT களில் சேர்வதற்கான JEE பயிற்சிகள் வழங்கப்பட்டது. அதன் விளைவாக கடந்த ஆண்டு 274 மாணவர்கள் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்தனர். அவர்களில் மாதிரிப் பள்ளி மாணவர்களுடன், மற்ற அரசுப் பள்ளி மாணவர்களும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளி மாணவர்களும் இடம்பெற்றிருந்தனர். அத்துடன் இரண்டு மாணவிகள் தாய்வான் நாட்டின் முழு கல்வி உதவித் தொகைப் பெற்று அங்குள்ள பல்கலைக் கழகங்களில் படிக்கச் சென்றுள்ளனர்.

கடந்த 2023-24ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, மாதிரிப் பள்ளி மாணவர்களுடன் அரசுப் பள்ளி மாணவர்களை யும், JEE, NEET மட்டுமல்லாது NIFT, CUET, CLAT என அனைத்து நுழைவுத் தேர்வுகளுக்கும் தயார் படுத்தப்பட்டனர். ஒவ்வொரு அரசு மேல்நிலைப்பள்ளிகளிலும் Hitech Lab கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதற்கான நுழைவுத் தேர்வுகளின் பாடத் திட்டங்களும், மாதிரி வினா விடைகளும், மாதிரிப் பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் வல்லுநர்களின் துணையுடன் விரிவாக அனிமேசனுடன் விளக்கப்பட்டு, ஏறத்தாழ 3500க்கும் மேற்பட்ட காணொலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் காணொலிகள் “மணற்கேணி” செயலி வழியாக அனைத்து மாணவர்களுக்கும் கட்டணமின்றி போய்ச் சேரும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது. Hitech lab மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் இந்த மணற்கேணி செயலியைப் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

“நான் முதல்வன்” இணைய தளம் வாயிலாக அனைத்து நுழைவுத் தேர்வுகளுக்கான கடந்த 10 ஆண்டுகளுக்கான கேள்வித் தாள்களும், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. இதற்காக, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த அனுபவமிக்கப் பேராசிரியர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், கடந்த 2023 அக்டோபர் நவம்பர் மாதங்களில், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கென சிறப்பு உயர்கல்வி வழிகாட்டு நிகழ்ச்சிகள் மாவட்டம் தோறும் நடத்தப்பட்டது. தமிழ் நாடெங்கும் 1098 மாற்றுத் திறனாளி மாணவர்கள் பங்கேற்ற அந்த நிகழ்வின் விளைவாக அரசுப் பள்ளிகளில் படிக்கும் 54 மாற்றுத்திறனாளி மாணவர்கள் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் இடம் பெற்றுள்ளனர். இதில் 32 பேர் NITல் பயில சென்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசின் இந்த செயல்பாடுகளின் விளைவாக இந்த ஆண்டு 447 மாணவர்கள் IIT, என்.ஐ.டி மட்டுமல்லாமல், தேசிய சட்டப் பல்கலைக்கழகங்கள், விண்வெளி ஆராய்ச்சித் துறை, காலணி வடிவமைப்பு, பேஷன் தொழில்நுட்பம், விமானப் போக்குவரத்து, கடல்சார் பல்கலைக்கழகம், தடய அறிவியல், திட்டமிடல் மற்றும் கட்டடக் கலை, ஹோட்டல் மேலாண்மை ஆகிய அனைத்துத் துறைகளிலும் உள்ள தேசிய முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் கல்வி பயில சேர்ந்துள்ளனர். அத்துடன், சமூகவியல், பொருளியல் துறைகளில் சிறந்த பல்கலைக்கழகங்களிலும் முழு உதவித் தொகையுடன் அரசுப் பள்ளி மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர். மேலும், 14 மாணவர்கள் தாய்வான், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள உலகின் சிறந்தப் பல்கலைக்கழகங்களில் சேர முழுமையான கல்வி உதவித் தொகைப் பெற்றுள்ளனர்.

இவ்வாறு நாட்டின் முதன்மை உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவர்களின் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும். வெளிநாடுகளில் முழு கல்வி உதவித் தொகைப் பெற்று படிக்கச் செல்லும் மாணவர்களின் முதல் பயணச் செலவையும் அரசே ஏற்கும். இது குறித்த அறிவிப்பு ஏற்கெனவே பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இம்மாணவ, மாணவியர் தடையின்றி உயர்கல்வியைப் படிக்க இயலும்.

பள்ளிக் கல்வித் துறை சார்பில் இன்றையதினம் நடைபெற்ற விழாவில், நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு உயர்கல்வி பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவமாணவியர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டி அவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் மடிக்கணிணிகளை வழங்கி வாழ்த்தியதுடன், தங்கள் நிறுவனங்களில் சேரும் தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்கள் உயர்கல்வியிலும் சிறப்பிடம் பெறத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தரும்படி உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகளையும் கேட்டுக் கொண்டார்.

**448 உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

பள்ளிக் கல்வித் துறையில் உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 25.2.2023 அன்று தொகுதி II A தேர்வு நடத்தப்பட்டு, 448 நபர்கள் உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இணைய வழியில் பணிநியமன கலந்தாய்வு நடத்தப்பட்டது. பள்ளிக் கல்வித் துறையின் உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 448 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திருமதி சோ.மதுமதி, சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், முதன்மை உயர்கல்வி நிறுவனங்களின் துணை வேந்தர்கள், இயக்குநர்கள் மற்றும் முதல்வர்கள், தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை முகாம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (02.8.2024) ஆஸ்திரேலிய துணைத் தூதரக அதகாரி திருமதி.சிலாய் ஜக்கி அவர்கள் மற்றும் துணை அதிகாரி Samuel Myers ஆகியோர் சந்தித்து கல்வித்துறையில் தமிழ்நாடு அரசும் ஆஸ்திரேலிய அரசும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடினர்.

### தி.மு.க. தலைமை இலக்கிய அணி சார்பில் – “கலைஞர் – 100 கவிதைகள் – 100” நூல் வெளியீடு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட - கி.வீரமணி பெற்றுக்கொள்கிறார்!

## கவிப்பேரரசு வைரமுத்து முன்னிலை! நா.சந்திரபாபு விழா ஏற்பாடு!

சென்னை, ஆக. 4-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கழக இலக்கிய அணி சார்பில் 100 கவிஞர்கள் எழுதியுள்ள கவிதை தொகுப்பினை கவிப் பேரரசு வைரமுத்து தொகுத்து வழங்கியுள்ள “கலைஞர்- 100 - கவிதைகள் - 100” நூலினை 7.8.2024 அன்று காலை 10 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, கவிப் பேரரசு வைரமுத்து முன்னிலையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பெற்றுக்கொள்கிறார்.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நூல் அறிமுக விழா நடைபெறுகிறது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை வகிக்கிறார். அணி செயலாளர் வி.பி.கலைராஜன் வரவேற்றுப் பேசுகிறார்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்.பி. டி.கே.எஸ். இளங்கோவன், அன்பகம் கலை, பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அமைச்சர் எ.வ.வேலு, திருச்சி சிவா எம்.பி., கவிப் பேரரசு வைரமுத்து ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். நிகழ்ச்சி நெறியாளர் தஞ்சை கூத்தரசன்.

கவிச்சுடர் கவிதைப் பித்தன், மு.தென்னவன், நந்தனம் நம்பிராஜன், ஈரோடு இறைவன், செந்தலை கவுதமன், டாக்டர் ந.எழிலன் எம்.எல்.ஏ., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., மா.பா.அன்புதுரை, நந்தனம் கி.மதி, போர் முரசு கதிரவன், மாநில இலக்கிய அணி நிர்வாகிகள் நா.செந்தில், பேரா சேவுகபெருமாள், கே.எஸ்.எம்.நாதன், சி.தசரதன், அ.திராவிட மணி, காரை வெங்கடாசலம், பெருநாழி போஸ், நேரு பாண்டியன், ஆடுதுரை உத்திராபதி, பரம்புரம் பழனி, ஸ்ரீதர், பகுதிச் செயலாளர்கள் நா.இராமலிங்கம், பரமசிவம், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், எஸ்.மதன்மோகன், வினோத் வேலாயுதம், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்கள் மு.சீனிவாசன், விஜய் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

விழா ஏற்பாட்டினை கழக இலக்கிய அணி பொருளாளர் நா.சந்திரபாபு செய்துள்ளார்.

### விவசாயிகளின் நலன் கருதி – நடப்பாண்டிலும்

# செப்.1 முதல் புதிய விலையில் நெல் கொள்முதல் செய்யப்படும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

சென்னை, ஆக.4-

நெல் விவசாயிகள் நலன் கருதி நடப்பாண்டிலும் (2024-25) 1•9.2024 முதல் புதிய விலையில் நெல் கொள்முதல் செய்யப்படும். சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2,450/; பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2,405/ வழங்கப்படும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிவித்துள்ளார்.



அவரது அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் 2002-2003 காரிஃப் பருவம் முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முகவராகச் செயல்பட்டு ஒவ்வொரு பருவத்திலும் அக்டோபர் 1-ந் தேதி முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. நெல் விவசாயிகள் நலன் கருதி முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்குக் கடிதம் எழுதி அனுமதி பெற்றுத்தந்ததால் 2022-2023 காரிஃப் பருவத்திலிருந்து செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

2023-24 காரிஃப் பருவத்தில் 31.07.2024 வரை 3200 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 3,85,943 விவசாயிகளிட மிருந்து 33,24,166 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 7,277.77 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 காரிஃப் பருவத்திற்கு சன்னரக நெல்லுக்கு அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஆதார விலையான ரூ.2,320/ உடன் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ. 130/ சேர்த்து சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2450/ என்ற விலையிலும் பொதுரக நெல்லுக்கு அறிவிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச ஆதார விலை ரூ. 2,300/ உடன் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ. 105/ சேர்த்து பொதுரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2,405/ என்ற விலையிலும் நெல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்படும். ஆதலால், விவசாயிகள் 01.09.2024 முதல் புதிய கொள்முதல் விலையில் தங்களது நெல்லினை அரசு சார்பில் நடத்தப்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி அறிவித்துள்ளார்.

### ஜெ.பிரேம்குமார் தலைமை! தாம்பரம் மேற்குப் பகுதி

# 64வது வட்டத்தில் நல உதவிகள் - மாபெரும் இறகுப்பந்து போட்டி!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - க.வசந்தகுமாரி - ஜி.காமராஜ் - எஸ்.இந்திரன் பங்கேற்பு!

தாம்பரம், ஆக. 4-

காஞ்சி வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், தாம்பரம் மேற்கு பகுதி, 64வது வட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் இறகுப் பந்து போட்டி மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா இன்று (4.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் எம்.ஜி.ஆர். தெரு, ஆனந்தபுரத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு ஜெ. பிரேம்குமார் தலைமை வகிக்கிறார். கே.ரமேஷ்பாபு வரவேற்கிறார். ஜெ.ஜோயல், வே.லஷ்மிபதி, ஜி.கனகராஜ், எஸ்.சந்திரன், கே. அன்னம்மாள், பி.ரகுநாதன், டி.திவாகரன், எச்.வசந்தகுமார், ஆர்.ஜெயக்குமார், அ.லோகேஸ்குமார், ஜெ.பி. ராஜா, ஆதி எம்.பாஸ்கர், ராஜ்குமார், இரா.மதிஅன்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களாக பி.கதிர்காமர், பி.ரியாஸ்கான், வி.ஏ.வீரமணி, எம்.அசோக்குமார், என்.அரவிந்த்ராஜ், ஜெ. டேவிட்சன், ஆர்.உதயகுமார் ஆகியோர் செயல்படுகின்றனர்.

இறகுப் பந்து போட்டியை எஸ்.இந்திரன் துவக்கி வைக்கிறார்.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கோப்பை மற்றும் நலத்திட்ட உதவிகளை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் திருமதி க. வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன் ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் வே.இராசேந்திரன், பொன்.சதாசிவம், ஆர்.ஆர்.தமிழ்ச்செல்வன், வ.க.ரவி, பா.குறிஞ்சி சிவா, வானவில் பாலா, ஜெ.விஜய் ஆனந்த், ஆதி சாலமோன், ஆர்.ஜான்சன், வி.முனுசாமி, பி.ஜோதிக்குமார், எம்.சீனிவாசகுமார், கொடி ஆர்.தாமோதரன், எல். பேகம், ரமணி ஆதிமூலம், டி.ஆர்.நரசிம்மன், எம். கலைவாணன், ஏ.நசீர், விஜி சிவகுமார், வ.லோகநாதன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

பி.பிரேம்குமார் நன்றி கூறுகிறார்.

### மு.தென்னவன் தலைமை! காரைக்குடி கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் - முனைவர் ப.வேலாயுத ராஜா எழுதிய

# ‘சொல்லின் செல்வர் கலைஞர்’ நூல் வெளியீட்டு விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வெளியிடுகிறார்! குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறப்புரை!

காரைக்குடி, ஆக. 4-

காரைக்குடி கலைஞர் தமிழ்ச்சங்கம் சார்பில் முனைவர் ப.வேலாயுத ராஜா எழுதிய ‘சொல்லின் செல்வர் கலைஞர்’ நூல் வெளியீட்டு விழா நடைபெறுகிறது.

காரைக்குடி கலைஞர் தமிழ்ச்சங்கம் சார்பில், காரைக்குடி, கண்ணதாசன் மணிமண்டபத்தில் இன்று (4.8.2024 - ஞாயிறு) காலை 10.00 மணிக்கு பேராசிரியர் முனைவர் ப.வேலாயுத ராஜா எழுதிய ‘சொல்லின் செல்வர் கலைஞர்’ நூல் வெளியீட்டு விழா நடைபெறுகிறது. முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் தலைமையில் நகர்மன்றத் தலைவர்கள் சே.முத்துத் துரை, சி.எம்.துரை ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நூலை வெளியிடுகிறார்.

இதில் நூலைப் பெற்றுக் கொண்டு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சிறப்புரை ஆற்றுகிறார். காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி வாழ்த்துரை வழங்குகிறார்.

நூலாசிரியர் ப.வேலாயுதராஜா ஏற்புரை வழங்க, கலைஞர் தமிழ்ச் சங்கச் செயலாளர் தி.செந்தில் குமார் நன்றியுரை ஆற்றுகிறார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை! நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 07.08.2024 அன்று புதன்கிழமை காலை கடலூர் கிழக்கு மாவட்டத்திலுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு, வட்டம், மற்றும் கிளைகள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், நினைவு அஞ்சலி செலுத்தியும், அமைதி ஊர்வலம் நடத்தியும் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும்.

இந்நிகழ்ச்சிகளை அந்தந்தப் பகுதிகளிலுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட மடப்பள்ளி ஊராட்சியில் சந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” முகாமினை திருப்பத்தூர் ஒன்றிய செயலாளர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. குத்து விளக்கினை ஏற்றி விழாவினை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். மாடப்பள்ளி ஊராட்சி மன்ற தலைவர் கோமதிகார்த்திகேயன் வரவேற்பு வழங்கினார். இதில் என்.சங்கர், பி.ராஜேந்திரன், எஸ்.அரசு, விஜயாஅருணாசலம், டி.ஆர்.ஞானசேகரன், கஸ்தூரிரகு, கலைவாணி செல்வராஜ், சுபாஷ் சந்திரபோஸ், சரஸ்வதிஜெயக்குமார், வி.அன்பழகன், சின்னபையன், எல்.சிவலிங்கம், எம்.ஜி.ராமசந்திரன், சாம்ராஜ், சாமிக்கண்ணு உமாகந்தன், லோகநாதன், மணி, பொதுமக்கள் மற்றும் கழகத் தோழர்கள் என பலரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.